செ.வெ.எண்:48 நாள்: 25.06.2019

# அரியலூர் மாவட்டத்தில் ஜமாபந்தி நிகழ்ச்சி நடைபெற்றது.

அரியலூர் மாவட்டத்தில் 1428-ஆம் பசலி ஆண்டிற்கான வருவாய் தீர்வாயம் நிகழ்ச்சி நான்காம் நாள் மாவட்ட முழுவதும் நடைபெற்றது. இதில் உடையார்பாளையம் வட்டத்திற்கான **ஜமாபந்தி வருவாய் தீர்வாயம்** நிகழ்ச்சி ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று (25.06.2019) நடைபெற்றது.

இதில், மொத்தம் **528** மனுக்கள் பெறப்பட்டு அவற்றில் **193** மனுக்கள் தீர்வு காணப்பட்டு, **172** மனுக்கள் விசாரணை செய்யப்பட்டுள்ளது. மேலும், **163** மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**அரியலூர்** வட்டத்திற்குட்பட்ட **ஜமாபந்தி (வருவாய் தீர்வாயம்)** நிகழ்ச்சி அரியலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவற்றில் மொத்தம் **168** மனுக்கள் பெறப்பட்டு, **92** மனுக்கள் தீர்வு காணப்பட்டு, **66** மனுக்கள் விசாரணை செய்யப்பட்டுள்ளது. மேலும், **10** மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், துணை வட்டாட்சியர்கள், நில அளவை அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் வருவாய் துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**